1981 ஆகஸ்ட் 27]

திரு. என். வி. என். சோமு: தலைவர் அவர்களே, நான் சொல்லிய பிரச்னை ஒரு தடவை மட்டும் நடந்திருந்தால் பரவாயில்லை, பல தடவைகள் நடந்திருக்கின்றன.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் சொல்வதிலே குறைபாடு இருக்கிறது. நான் சபாநாயகராக இருந்து பதில் சொல்லக்கூடாது அது முறையல்ல, ஆகவே சொல்லவில்லை. நீங்கள் சொல்வதிலே எந்தக் கொந்தளிப்பும் இல்லை.

3. உரிமைப் பிரச்சினை.

மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் மீது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்து, திரு. ரகுமான்கான் அவர்கள் ஒரு உரிமை மீறல் பிரச்னை கொடுத்துள்ளார், அதைப் பற்றி மாண்புமிகு அமைச்சரவர்கள் ஒரு கருத்தைத் தெரிவிக் கிறேன் என்று சொல்லி இருக்கிறார், அமைச்சர் தற்போது கருத்து தெரிவிப்பார்.

திரு. அ. ரகுமான்கான்: பேரவைத் தலைவர் அவர்களே நான் என்ன உரிமைப் பிரச்சினைக் கொடுத்திருக்கிறேன் என்று நீங்கள் முதலிலே வாசித்து விடுங்கள். இதற்கு நீங்கள் ஏற்கனவே கன்சன்ட் கொடுத்திருக்கிறீர்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கன்சன்ட் கொடுக்க வில்லை. எந்தப் பிரச்சினை வந்தாலும் அதை நான் குறிப்பிட்ட, சம்பந்தப்பட்ட இலாகா அல்லது அமைச்சர்க்கு அனுப்பி வைக்கிறேன். அதுபற்றி அவர்கள் கருத்துத் தெரிவிக்கிறார்கள்.

திரு. அ. ரகுமான்கான்: எந்தப் பிரச்சினையாக இருந்தாலும் சட்டசபை விதிகளுக்குட்பட்டுதான் நீங்கள் முடிவெடுக்க வேண்டும். அந்தப் பிரச்சினையை அவையில் நீங்கள் வைத்தாக வேண்டும். அதற்குப் பிறகுதான் உறுப்பினர்களை பேச அனுமதிக்க வேண்டும். சட்டசபை விதிகளுக்குப் புறம்பாக போக முடியாது. எனவே தயவு செய்து அதை வாசித்து விடுங்கள்.

திரு. நா. சுந்தரராஜ்: தலைவர் அவர்களே, ஏதோ ஒரு பிரச்சினையை திரு. ரகுமான்கான் அவர்கள் கொடுத்திருக் கிறார்கள். அமைச்சர் அவர்களை பேச அழைக்கும் முன்பாக அந்தப் பிரச்சினை சம்பந்தமாகச் சொல்லிவிடுங்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. ரகுமான்கான் அவர்கள் தனது உரிமைப் பிரச்சினையில் கூறியதாவது:

22-8-1981 அன்று தமிழ்நாடு சட்டப் பேரவையில் 1981 ஆம் ஆண்டு பொதுமக்கள் வழக்கமாகக் கூடும் இடங்கள் திருத்த மசோதாவின் மீது நடைபெற்ற விவாதத்தில் கலந்து கொண்டு பேசினேன், பொது இடங்களில், பொருட்காட்சிகளில், கலை நிகழ்ச்சிகளில், சூதாட்டங்களையும், ஆபாசத்தையும் ஒழிக்க மசோதா கொண்டு வரும் இந்த அரசு சென்னை நகரத்தில் நடைபெறும் குதிரைப் பந்தயம் ஏன் ஒழிக்கவில்லை......... இதைப்போலவே ஆபாசம் ஒழிக்கப்பட வேண்டுமானால், சென்னை நகரில் பெரிய ஓட்டல்களில் காபரே நடனம் ஆபாசமாக இல்லையா? அது ஏன் ஒழிக்கப்படவில்லை? சினிமாக்களில் ஆபாசமாக இருக்கிறது படுக்கையறைக் காட்சி முதலிரவுக் காட்சிகள் ஆபாசமாக இருக்கின்றன. சினிமா சுவரெட்டிகளில் ஆபாசக் காட்சிகள் இருக்கின்றன......... சென்னையில் மவுண்ட்ரோட்டில் மசாலா மந்திரவாதி என்னும் சினிமா விளம்பரத்தட்டி, ஆபாசமாக இருக்கின்றது. பொது இடங்களில் ஆபாசத்தை ஒழிக்க சட்டம் கொண்டுவரும் அரசு இதுகுறித்து ஏன் நடவடிக்கை எடுக்கவில்லை என்று பேசினேன். இதற்கு பதில் உரைத்த உள்ளாட்சித் துறை அமைச்சர் மசாலா மந்திரவாதி படத்தின் பேனரைப்பற்றி இங்கே குறிப்பிட்டார்கள். ஆபாசம் என்பது மசாலா மந்திரவாதிகள் மூலமும் வருகிறது. சிலைகளிலும் உள்ளது. புகாரி ஓட்டலுக்கு எதிரிலும், பிலால் ஓட்டலுக்கு எதிரிலும், சங்கம் ஓட்டலுக்கு எதிரிலும் மசாலா மந்திரவாதிகள் சிலைகள் இருக்கின்றன என்று குறிப்பிட்டார். .... உடனே நான் ஒழுங்குப் பிரச்சினையை கிளப்பி அமைச்சர் சொல்லிய இடத்தில் அமைச்சர் சொல்வதுபோல ஆபாசமான மசாலா மந்திரவாதிகள் சிலைகள் இருக்கின்றனவா? அமைச்சர் சொல்வது உண்மையா? அந்த ஆபாச சிலைகளை அகற்ற அரசு ஏன் நடவடிக்கை எடுக்கவில்லை என்று கேட்டேன். உடனே அமைச்சர், அந்த ஆபாச சிலைகளை அகற்ற அரசு நடவடிக்கை எடுக்கும் என அவையில் அறிவித்தார். அமைச்சர் அவையில் குறிப்பிட்டதைப் போல புகாரி ஓட்டலுக்கு எதிரிலும், பிலால் ஓட்டலுக்கு எதிரிலும், சங்கம் ஓட்டலுக்கு எதிரிலும் எந்த மசாலா மந்திரவாதிகளின் சிலையும் இல்லை. உண்மை இப்படி இருக்க அமைச்சர் குழந்தைவேலு உண்மைக்கு புறம்பாக வேண்டும் என்றே அவையை திசை திருப்பும் நோக்கத்தோடு புகாரி ஓட்டலுக்கு எதிரிலும், பிலால் ஓட்டலுக்கு எதிரிலும், சங்கம் ஓட்டலுக்கு எதிரிலும் மசாலா மந்திரவாதிகளின் சிலைகள் இருக்கின்றன. அவைகள் அகற்றப் படும் என்று தவறான தகவலை அவைக்கு தந்துள்ளார். இது அவையின் உரிமை மீறிய செயலாகும். ஆதலின் இதுகுறித்து தாங்கள் விசாரித்து அமைச்சரை உரிமைக்குழுவின் விசாரணைக்கு உட்படுத்தி நடவடிக்கை எடுக்கவேண்டுகிறேன்.

இது குறித்து மாண்புமிகு அமைச்சர் குழந்தைவேலு அவர்கள் கருத்துத் தெரிவிப்பார்.

1981 ஆகஸ்ட் 27]

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவர் அவர்களே, கடந்த 22 ஆம் தேதி நடந்த விவாதத்திலே பங்கு கொண்டு ஒரு சில கருத்துக்களை இந்த மாமன்றத்திலே நான் பேசினேன். மாண்புமிகு உறுப்பினர் ரகுமான்கான் அவர்கள் ஆபாசங்களை பற்றி எல்லாம் விளக்குகின்ற நேரத்தில் புகாரி ஓட்டலுக்கு முன்னாலே மசாலா மந்திரவாதிகள் என்று அங்கே பேனர் வைக்கப்பட்டிருக்கின்றது என்பதனை எடுத்துச் சொன்னார். நான் பதில் கூறுகின்ற நேரத்தில் மசாலா மந்திரவாதியின் பேனரை நான் பார்க்கவில்லை. ஆனால் புகாரி ஓட்டலுக்கு முன்னாலும் பிலால் ஓட்டலுக்கு முன்னாலும் சங்கம் ஓட்டலுக்கு முன்னாலும் மசாலா மந்திரவாதிகளின் சிலைகள் இருக்கின்றன என்று நான் கூறினேன்.

[முற்பகல் 10.40]

நான் கூறியதனுடைய நோக்கம் எல்லாம் அங்கே யாரையும் புண்படுத்த வேண்டுமென்கிற எண்ணத்தோடு அந்தக் கருத்தைக் கூறவில்லை. அப்படி யாருக்காவது அப்படிப்பட்டக் கருத்துக்கள் ஏற்பட்டு, அதன் காரணமாக வருத்தம் அடைகிற சூழ்நிலை ஏற்பட்டால் அதற்கு நானும் பொறுப்பாளி ஆக முடியாது.

* * *

என்பதை நான் சுட்டிக்காட்டி வேறு எந்த எண்ணத்தோடும் அவைகளை கூறவில்லை என்பதை நான் பணிவன்போடு தெரிவித்துக் கொள்கிறேன். உண்மையிலேயே இரவு நேரங்களில் நானும் பல்வேறு நேரங்களில் பார்த்து இருக்கிறேன். அங்கே பிலால் ஓட்டல், புகாரி ஓட்டல், சங்கம் ஓட்டல்களுக்கு முன்னால் கார்களை நிறுத்திக் கொண்டு அங்கேயே உணவு சாப்பிடுகிற நிலை இருக்கிறது. அப்படி உணவு சாப்பிட வருகிறவர்களில் பெண்களில் கூட ஒரு சிலர் அங்கே வருகிறார்கள்.

* * *

என்ற எண்ணத்தோடு தான் கூறினேனேத் தவிர வேறு எந்த எண்ணத்தோடும் நான் கூறவில்லை. ஆகவே உரிமைப் பிரச்சினை வருவதற்கும் இடமில்லை. காரணம் யாரையும் கோடிட்டு, குறிப்பிட்டு கூறியிருந்தால் உரிமைப் பிரச்சினை வருவதற்கு நியாயம் உண்டு. இந்த சட்ட மன்றத்திலே இருக்கிற எந்த உறுப்பினர்களையும் காழ்ப்புணர்ச்சியோடு அல்லது தவறான கருத்தோடு, எண்ணத்தோடு அவைகளை நான் கூறவில்லை என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. க. அன்பழகன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது ஏற்கனவே இழைக்கப்பட்ட ஒரு அநீதிக்கு மேலும் ஒரு அநீதி இழைக்கிற முறையிலே அமைச்சர் அவர்களுடைய வாதம் இருக்கிறது. அப்படித்தான் வாதம் நடத்த வேண்டுமென்று அவர் விரும்புவாரேயானால், அதே முறையில்

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றன.

வாதம் நடத்தி ஆளும் கட்சிக்கு பெருமை தேடித்தரட்டும் என்று நான் கூறிக்கொள்கிறேன். இந்த தவறுக்கு வருத்தம் தெரிவிப்பதாகத் தான் சபாநாயகர் அவர்கள் எங்களிடத்திலே தெரிவித்தார்கள். வருத்தம் தெரிவிக்கவில்லை என்பது மட்டு மல்ல, 'It is adding insult to the already committed injury' என்று சொல்லத்தக்க வகையில் ஏற்கனவே செய்யப்பட்ட அநீதிக்கு மேலும் ஒரு அநீதி இழைக்கிற வகையிலும், பொதுமக்களையும் பெரும் அளவுக்கு புண்படுத்துகிற வகையிலும் அந்த பதில் அமைந்திருக்கிறது இதுதான் ஆளும் கட்சியின் கொள்கையாக இருக்குமானால், அப்படித்தான் நடந்து கொள்ள வேண்டுமென்று விரும்பினால், அது சட்டமன்றத்திலே இடம் பெறட்டும். இனி நாங்கள் உரிமைப்பிரச்சினையை வற்புறுத்தவில்லையென்றாலும் இந்த உரிமையை எப்படி நிலை நாட்டுவது என்பதை நாங்கள் அறிந்திருக்கிறோம் என்று நான் தெரிவித்துக்கொள்ள விரும்பு கிறேன்.

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது உணர்வு பூர்வமான பிரச்சினையாக உருவாக்கப்பட்டிருக்கிறது. எப்படி இருப்பினும் இந்த உரிமைப் பிரச்சினையை வற்புறுத்தவில்லை என்று எதிர் கட்சித் துணைத் தலைவர் அவர்கள் கூறியிருக்கிறார்கள், என்ற காரணத்தால் நான் அமைச்சரவையின் சார்பாக தெரிவித்துக் கொள்கிறேன். மாண்புமிகு அமைச்சர் குழந்தைவேலு அவர்கள் பேசியதில் தவறான கருத்துக்கள் என்று இருக்குமானால் அதற்கு இந்த அமைச்சரவை வருத்தம் தெரிவித்துக் கொள்கிறது.

4. ஒத்திவைப்புத் தீர்மானம்.

தமிழகத்தின் எல்லையோரக் கடற் பிராந்தியத்தில் இலங்கை கடற்படை போர் ஒத்திகை நடத்தல்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திருவாளர்கள் மு. அம்பிகாபதி, இரா. கருப்பையா, பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம், டி. மணி, கே. ஆர். சுந்தரம், என். எஸ். வி. சித்தன், ப. நெடுமாறன் ஆகியோர்,

''தமிழகத்தின் எல்லையோரப் பகுதி கடற் பிராந்தியத்தில் இலங்கை கடற்படை போர் ஒத்திகை நடத்துவதால் கடல் பகுதியில் மீன் வளம் குறைவதோடு மீனவர்கள் மத்தியில் மற்றும் பொது மக்களிடையே எழுந்துள்ள பதட்டநிலை குறித்து விவாதிக்க பேரவையின் இதர அலுவல்களை ஒத்தி வைக்க வேண்டும்''.

என்ற தீர்மானத்தை மொழிய என் அனுமதி கேட்டு அறிவிப்பு கொடுத்துள்ளனர். இது எப்படி அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்தது என்பது குறித்து அவர்கள் மிகச் சுருக்கமாகக் கூறும்படி கேட்டுக் கொள்கிறேன்.